## சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**O.S. No. 68//2013 சிவராஜிராஜன் (பி.சா.1) தேதி:25.06.2024**

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

எனது தந்தை முத்தையா நாடார் – புஷ்பகாந்தியம்மாள் ஆகியோர்களுக்கு என்னையும் சேர்த்து 6 நபர்கள் வாரீசுகள் ஆவோம். வழக்கின் வாதி சுரூபராணி என் உடன்பிறந்த இளையசகோதரி ஆவார். இவ்வழக்கின் 2ம் வாதி தங்கஜோதி என்பவர் என் உடன் பிறந்த இளையசகோதரி ஆவார். 2ம் பிரதிவாதி உயிருடன் உள்ளார். என் உடன்பிறந்த மற்ற சகோதரிகள் சொர்ணவிஜயா, கலைசெல்வம் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். எனக்கும் என் உடன்பிறந்த சகோதரிகளுக்கும் இடையில் தாவாசொத்துக்கள் சம்பந்தமாக கடந்த 20 வருடங்களாக தாவா நடைபெற்றுவருகிறது. இந்த வழக்கு தவிர 1ம் வாதி இதே நீதிமன்றத்தில் எனது தந்தையின் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கானது பகுதியாக நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை எதிர்த்து எனது தரப்பில் மேல்முறையீடு தாக்கல்செய்துள்ளேன். அந்த மேல்முறையீடு வழக்கு தூத்துக்குடி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு எண் எனக்கு ஞாபகமில்லை. இவ்வழக்கின் வாதிகள் கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், என்மீது வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கானது போஸ்ட் ஆபீஸ் தெருவில் உள்ள வீடு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். அந்த வீட்டைபொறுத்து உயில் அடிப்படையில் வாதிகள் உரிமைகோரியுள்ளனர் என்றால் சரிதான். அந்த உரிமையியல் நீதிமன்ற வழக்கில் என்தரப்பில்

எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் இவ்வழக்கின் வாதிகள் என்மீது கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.296/2013 என்ற வழக்கின் பிராது என்றால் சரிதான். அது வா.சா.ஆ.15, என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி வழக்கின் என்தரப்பில் தாக்கல்செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.16. அந்த வழக்கை நிராகரிக்க நான்தாக்கல் செய்த மனு தள்ளுபடிசெய்யப்பட்டது என்றாலும் அதை எதிர்த்து இந்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றாலும் சரிதான். அ.வ.எண்.296/2013 என்ற வழக்கில் எனது தரப்பில் எதிர்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கில் எனது தரப்பில் தாக்கல்க செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் என் தாயார் எனது பெயரில் எழுதிவைத்ததாக குறிப்பிடும் உயில் ஆவணம் பற்றி கூறியுள்ளேனா? என்றால் இல்லை. இந்த வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையில் அந்த உயில் ஆவணம் பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 18.6.2003 தேதிய உயில் ஆவணத்தை எனது கூடுதல் எதிர்வழக்குரையுடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி வட்டாட்சியர் அலுவலகத்தில் கூட்டுபட்டா கோரி மனு கொடுத்தபோது நான் ஆட்சேபணை செய்தேன். வட்டாட்சியர் அலுவலகத்தில் கூட்டுபட்டாவிற்கு உத்தரவு ஏற்பட்டது என்றால் சரிதான். வட்டாட்சியரின் உத்தரவை எதிர்த்து கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)D.Marikkalai

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி